வயதான பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளிடமிருந்து பராமரிப்புத் தொகையைப் பெற **பெற்றோர் பராமரிப்புச் சட்டம்** வகை செய்கிறது

## பராமரிப்புக்காக யார் விண்ணப்பம் செய்யலாம்?

நீங்கள் கீழ்கண்டவராக இருந்தால், நீங்கள் விண்ணப்பிக்கலாம்:

- 60 மற்றும் அதற்கு மேற்பட்ட வயதினர்
- சிங்கப்பூரில் குடியிருப்பவர்
- பொருளாதார ரீதியாக உங்களை நீங்களே பராமரித்துக்கொள்ள இயலாதவர்

## கீழ்க்கண்டவற்றில் இருந்தும் கூட உங்களுக்கு உதவி கிடைக்கும்...

**சமுதாய ஆதரவு அலுவலகங்கள் (SSOகள்)**

**கொம்கேர் நேரடித்தொலைபேசி எண்:**

**1800-222 0000**

சமுதாய ஆதரவு அலுவலகங்கள் (SSOகள்) என்பவை, உதவி தேவைப்படும் குடியிருப்பாளர்களுக்கு அருகில் சமுதாய உதவியை வழங்குவதற்காக, சமுதாய, குடும்ப மேம்பாட்டு அமைச்சால் (MSF) அமைக்கப்படும் அலுவலகங்களாகும்.

**குடும்பச் சேவை நிலையங்கள் (FSCகள்)**

**கொம்கேர் நேரடித்தொலைபேசி எண்:**

**1800-222 0000**

**FSC மின்-இருப்பிடங்காட்டி:**

**http://app.msf.gov.sg/dfcs/familyservice/default.aspx**

குடும்பச் சேவை நிலையங்கள் (FCSகள்) என்பவை பலவீனமான மற்றும் உதவி தேவைப்படும் குடும்பங்களுக்கும் தனிநபர்களுக்கும் சமூகச் சேவைகளை வழங்குவதற்கு சமூக அடிப்படையில் அமைந்த நிலையங்களாகும்.

*இந்தச் சிற்றேட்டில் உள்ள அனைத்துத் தகவல்களும் டிசம்பர் 2015 நிலவரப்படி துல்லியமானவை.*

## ஆணையாளரின் அலுவலகத்திற்கும் நடுவர் மன்ற அலுவலகத்திற்கும் எவ்வாறு சென்றடைவது




முகவரி:

**ஃபேமிலி லிங்க் @ லெங்கொக் பாரு**

8 லெங்கொக் பாரு, #02-01, சிங்கப்பூர் 159052

பேருந்துச் சேவைகள்: 139 (லெங்கொக் பாரு)

14, 123, 139, 147, 153, 196, 197, 198, 855, 961
(ஜாலான் புக்கிட் மேரா)

அருகாமையில் உள்ள MRT: **ரெட்ஹில் நிலையம்**

செயல்படும் நேரங்கள்:

**திங்கள் முதல் வெள்ளி வரை: காலை 8.30 மணி முதல் மாலை 5.00 மணி வரை**

**சனி, ஞாயிறு மற்றும் பொது விடுமுறை தினங்கள்: மூடப்பட்டிருக்கும்**

தொடர்புத் தகவல்கள்:

**ஆணையாளர் அலுவலகம்**

**விசாரணைக்கான தொலைபேசி எண்: 1800-222 0000**

**அல்லது 6471 6313**

**மின்னஞ்சல்: msf-enquiry_cmp@msf.gov.sg**

**நடுவர் மன்ற அலுவலகம்**

**விசாரணைக்கான தொலைபேசி எண்: 1800-258 5128**

**அல்லது 6476 3285**

**மின்னஞ்சல்: msf_tmp@msf.gov.sg**

MSF

# பெற்றோர் பராமரிப்பு

பெற்றோர் பராமரிப்புக்கான ஆணையாளர்

பெற்றோர் பராமரிப்புக்கான நடுவர் மன்றம்

**www.maintenanceofparents.gov.sg**

## பெற்றோர் பராமரிப்புக்கான ஆணையாளரால் சமரசம் செய்துவைக்கப்படுதல் (CMP)

## பெற்றோர் பராமரிப்புக்காக நடுவர் மன்றத்தில் பராமரிப்பு ஆணைக்கான விண்ணப்பம்

*தொடங்குக*

### பெற்றோர் பராமரிப்புக்கான ஆணையாளரிடம் சமரசத்திற்காக நாடுங்கள்

- பெற்றோர் பராமரிப்பு ஆணையாளர் (CMP) என்பது சமரசம் வாயிலாகப் பராமரிப்பு பிரச்சனையை நீங்களும் உங்கள் பிள்ளைகளும் தீர்த்துக்கொள்ள உதவுவதற்கான ஒரு சட்டத்துறை-அல்லாத தளமாகும்.
- **நீங்கள் பெற்றோர் பராமரிப்பு ஆணையாளருடன் ஒரு நேர்காணலில் கலந்துகொள்ள வேண்டியது அவசியமாகும்.**
- கட்டணங்கள் ஏதும் தேவைப்படாது.

வெற்றியடையவில்லை எனில்

வெற்றியடைந்தது

### ஒரு தனிப்பட்ட அடிப்படையில் இணக்க ஒப்பந்தம் (MOA):

நீங்களும் உங்கள் பிள்ளைகளும் ஒரு இணக்க ஒப்பந்தத்தில் (MOA) கையொப்பமிட்டு, அதன் நிபந்தனைகளுக்கு இணங்கி நடக்க வேண்டும்.

தவறியது

### நடுவர் மன்றத்தில் பெற்றோர் பராமரிப்புக்காக விண்ணப்பம் செய்யுங்கள்

- **நீங்கள் நடுவர் மன்றத்திற்கு நேரில் சென்று விண்ணப்பிக்க வேண்டியது அவசியமாகும்.**
- நல்ல ஒரு காரணத்தினால் நீங்கள் நேரடியாகச் சென்று விண்ணப்பம் செய்ய முடியாவிட்டால், உங்கள் சார்பாக விண்ணப்பம் செய்ய நீங்கள் மற்றொருவருக்கு அதிகாரம் அளிக்கலாம்.
- கட்டணங்கள் ஏதும் தேவைப்படாது.

**தேவைப்படும் ஆவணங்களும் தகவல்களும்:**

1. அடையாள அட்டை
2. வங்கிக் கணக்கு
3. உங்கள் சொத்துக்கள் மற்றும் சேமிப்புகள் பற்றிய தகவல்கள்
4. உங்களின் வாழ்க்கைச் செலவினங்கள் பற்றிய தகவல்கள்
5. பொருத்தமானால், மருத்துவ அறிக்கைகள்
6. உங்கள் பிள்ளைகளின் பெயர், அடையாள அட்டை எண் மற்றும் கடைசியாகத் தெரிந்த அவர்களின் முகவரி
7. உங்கள் சார்பாக மற்றொருவர் விண்ணப்பம் செய்கிறார் என்றால், அந்நபரும் கூட தனது அடையாள அட்டையையும் அதிகாரம் அளிக்கும் உங்களின் கடிதத்தையும் கொண்டு வரவேண்டும்.

1-2 வாரங்கள்

### 1. விண்ணப்பம் பற்றிய அறிவிப்பு
### 2. சமரசம் பற்றிய அறிவிப்பு

- நீங்கள் விண்ணப்பித்த 7 வேலை நாட்களுக்குள் உங்களுக்கும் உங்கள் பிள்ளைகளுக்கும் விண்ணப்பம் மற்றும் சமரசம் பற்றிய அறிவிப்புகள் அனுப்பி வைக்கப்படும்.
- உங்கள் விண்ணப்பத்திற்கான தங்கள் பதிலைத் தாக்கல் செய்ய, உங்கள் பிள்ளைகளுக்கு விண்ணப்பம் பற்றிய அறிவிப்பை அனுப்பியதில் இருந்து 14 நாட்கள் கொடுக்கப்படும்.
- நீங்களும் உங்கள் பிள்ளைகளும் கூட அட்டவணையிடப்பட்ட சமரசத்தில் கலந்துகொள்ள வேண்டியிருக்கும்.

வெற்றியடைந்தது

### இணக்க ஒப்பந்தம் (MOA) மேலொப்பமிட்டு ஒரு பராமரிப்பு ஆணை ஆதல்:

- நீங்களும் உங்கள் பிள்ளைகளும் ஒரு இணக்க ஒப்பந்தத்தில் (MOA) கையொப்பமிட வேண்டும்.
- அறிவிப்பு நடுவர் மன்றம் முன்னிலையில் இணக்க ஒப்பந்தத்தை மேலொப்பமிட்டு பராமரிப்பு ஆணையாக மாற்ற உங்களின் விண்ணப்பம் வைக்கப்படும்.
- நீங்கள் இந்த அறிவிப்பில் கலந்துகொள்ள வேண்டியிருக்காது.

சமரசம் வெற்றியடையவில்லை எனில்

### 3. விசாரணை பற்றிய அறிவிப்பு

- விசாரணை பற்றி அறிவிப்பு, விசாரணைக்கு குறைந்தபட்சம் 2 வாரங்களுக்கு முன்னதாக அனுப்பி வைக்கப்படும்.
- இந்த விசாரணைக்கு நீங்களும் உங்கள் பிள்ளைகளும் கலந்துகொள்ள வேண்டியிருக்கும்.

### நடுவர் மன்றத்தால் விசாரணை செய்யப்படுதல்

- உங்கள் விண்ணப்பத்தைக் குறைந்தபட்சம் 3 நடுவர் மன்ற உறுப்பினர்கள் விசாரணை செய்து, உங்களின் மற்றும் உங்கள் பிள்ளைகளின் பணவசதி மற்றும் சூழ்நிலைகளைக் கருத்தில் கொண்ட பிறகு ஒரு ஆணையை வழங்குவார்கள்.

### பராமரிப்பு ஆணை வழங்கப்பட்டது